**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 340/2024**
**CNR. NO.TNRM070074942024**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கோவிலாங்குளம் காவல்நிலையம் குற்ற எண் – 40/2024 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | தமிழ்ஏசுபாலன் |
| 3. | த/பெ. | செல்வராஜ் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | வேப்பமரத்துப்பனை, நரிப்பையூர், சாயல்குடி |
| 6. | வயது | 38/24 |
| 7. | சம்பவ நாள் | 27-09-2024 ம் தேதி 19.00 மணி |
| 8. | புகார் தேதி | 28-09-2024 ம் தேதி 07.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 28-09-2024 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 06-12-2024 |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 20-11-2024 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 22-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 25-05-2026 |

| | | |
|---|---|---|
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவு 303(2) of BNS ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது பிரிவு 303(2) of BNS ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | -- |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை<br>அ.சா.1 / 22.05.2026 / 22.05.2026<br>அ.சா.2 / 25.05.2026 / 25.05.2026 |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) / 351 (1) (b) B.N.S.S Act ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 26-05-2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | இல்லை |
| 20. | எதிரி/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 02/2026, dated: 25.05.2026 |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | இல்லை |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |
| 23. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. S. இராமநாதன் |
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:24:28 +0530

| | | |
|---|---|---|
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி மீது பிரிவு 303(2) BNS ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரி பிரிவு 255 B.N.S.S ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் சி.பி. எண். 220/2024 dt. 07.10.2024 ல் கண்ட அ.சா.பொ.1 ஆன சுமார் 50 செ.மீ நீளமுள்ள பித்தளை குத்துவிளக்கு ஒன்று, அ.சா.பொ.2 ஆன சுமார் 246 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று, அ.சா.பொ.3 ஆன சுமார் 378 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் உரிமை கோரும் நபருக்கு ஒப்படைக்கவும், யாரும் உரிமை கோராத பட்சத்தில் அரசுடமையாக்கவும் உத்தரவிடப்படுகிறது. TN-65-AU-2031 என்ற எண் கொண்ட CD-100 இருசக்கர வாகனத்தை எதிரியானவர் Cr.M.P. No. 8014/2024 dt. 20.12.2024 உத்தரவில் பெற்றுச் சென்றுள்ளார். வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி |

| | | |
|---|---|---|
| | | செயல்படவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு 20-11-2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26-05-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. இராமநாதன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26-05-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. கடந்த 28.09.2024ம் தேதி அதிகாலை 01.00 மணியளவில் எதிரியானவர் TN-65-AU-2031 என்ற எண்ணுள்ள Bajaj CD-100 என்ற மோட்டர் சைக்கிளில் கமுதியில் இருந்து சாயல்குடி நோக்கி வந்தவர் கோவிலாங்குளத்தை கடந்து சென்ற போது கோவிலாங்குளம் ரோட்டின் வலதுபுறம் உள்ள அரக்காசு அம்மன் கோவிலில் இருந்த ரூ.1200/- மதிப்புள்ள ஒரு குத்துவிளக்கு மற்றும் இரண்டு மணிகளை TN-65-AU-2031 என்ற எண்ணுள்ள Bajaj CD-100 என்ற மோட்டர் சைக்கிளில் திருடிச் சென்ற குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 303(2)of BNSன் கீழ் கோவிலாங்குளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:25:32 +0530

சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு பிரிவு 230 B.N.S.S Act ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 04–12–2024 ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் பிரிவு. 263(1) B.N.S.S Act எதிரி மீது பிரிவு 303(2) of BNS ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவிய போது எதிரி அவர் மீதான குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு பிரிவு. 265 B.N.S.S Act ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.2** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3** சான்றுப் பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசு தரப்பில் அசா.1 மற்றும் அசா.2 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 சாட்சி பிறழ்சாட்சியாகி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 கோவிலாங்குளம் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு. சண்முகவேலு அவர்களது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில்

இருந்த போது அ.சா.1 அளித்த புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்து, சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், எதிரியை கைது செய்து எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வழக்குச் சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றியும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை படிவம்–91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், அத்துடன் புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

ii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து பிரிவு 351 (1) (b) B.N.S.S Act ன் படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :–</u>**

i. எதிரி மீது பிரிவு 303(2) of BNS ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள்

பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அ.சா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு தனது வீட்டிற்கு அருகில் உள்ள அரைக்காசு அம்மன் கோவிலில் ஏதோ திருட்டு நடந்திருப்பதாக கூறி போலீசார் தன்னிடம் கையொப்பம் கேட்டதால் வெள்ளை தாளில் கையொப்பம் (அ.சா.ஆ.1) செய்ததாகவும், புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 ன் சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. அசா. 2 கோவிலாங்குளம் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் திரு. சண்முகவேலு அவர்கள் கடந்த 28.09.2023 ம் தேதி 07.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை **(அ.சா.ஆ.2)** பெற்று நிலையக் குற்ற எண்.40/2024 பிரிவு 303(2) of BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.3)** பதிவு செய்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றே 07.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (**அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.5)** தயார் செய்துள்ளார் என்றும்,, சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துளளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii. மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவம்

நடந்தது உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் திருவரை பஸ் ஸ்டாப் அருகில் TN-65-AU-2031 என்ற பைக்கில் சந்தேகத்திற்கிடமான நிலையில் நின்று கொண்டிருந்தவரை விசாரித்த போது எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை **(அ.சா.ஆ.6)** சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சுமார் 50 செ.மீ நீளமுள்ள குத்துவிளக்கு ஒன்று **(அ.சா.பொ.1),** சுமார் 246 கிராம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று (**அ.சா.பொ.2**), சுமார் 378 கிராம் எடையுள்ள பித்தளை மணி ஒன்று **(அ.சா.பொ.3)** மற்றும் எதிரி திருட்டுக்கு பயன்படுத்திய அத்துடன் வழக்கின் புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். TN-65-AU-2031 என்ற CD100 இருசக்கர வாகனத்தை அத்தாட்சியில் (**அ.சா.ஆ.7**) கைப்பற்றியும், வழக்குச் சொத்துக்களை படிவம் -91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், அத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 07.10.2024 ம் தேதியன்று இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv. மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலிக்கையில் அசா.1 ன் சாட்சியம் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாலும், அ.சா.2 சம்பவ இடத்தில் இருந்தாரா என்பது குறித்து சந்தேகம் எழுவதாலும், போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்தார்களா என்பது பற்றி நம்பம்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி

சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது பிரிவு 303(2) of BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

v. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி மீது பிரிவு 303(2)ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை பிரிவு 255 B.N.S.S Act ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

vi. இவ்வழக்கில் சி.பி. எண். 220/2024 dt. 07.10.2024 ல் கண்ட அ.சா.பொ.1 ஆன சுமார் 50 செ.மீ நீளமுள்ள பித்தளை குத்துவிளக்கு ஒன்று, அ.சா.பொ.2 ஆன சுமார் 246 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று, அ.சா.பொ.3 ஆன சுமார் 378 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் உரிமை கோரும் நபருக்கு ஒப்படைக்கவும், யாரும் உரிமை கோராத பட்சத்தில் அரசுடமையாக்கவும் உத்தரவிடப்படுகிறது. TN-65-AU-2031 என்ற எண் கொண்ட CD-100 இருசக்கர வாகனத்தை எதிரியானவர் Cr.M.P. No. 8014/2024 dt. 20.12.2024 உத்தரவில் பெற்றுச் சென்றுள்ளார். வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026 ம்

 THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.05.26 19:26:18 +0530 

ஆண்டு மே திங்கள் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.05.26 19:26:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. உருவாட்டி |
| அ.சா.2 | திரு. அழகர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.09.2024 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 28.09.2024 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 28.09.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 28.09.2024 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 28.09.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 28.09.2024 | ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.7 | 28.09.2024 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | -- | TN-65-AU-2031 என்ற எண் கொண்ட CD-100 இருசக்கர வாகனத்தை காட்டக்கூடிய குறுந்தகடுடன் கூடிய புகைப்படம் எண்ணம்-6 |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 50 செ.மீ நீளமுள்ள பித்தளை குத்துவிளக்கு ஒன்று |

| | |
|---|---|
| அ.சா.பொ.2 | சுமார் 246 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று |
| அ.சா.பொ.3 | சுமார் 378 கிராம் அளவுள்ள பித்தளை மணி ஒன்று |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

**<u>குறிப்பு :–</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:26:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.